**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. STC - 311/2021**

**Deposition of Witness for Prosecution : D.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **பெனிட்கரன்** | Caste | : |
| Father/Husband Name | : **பாலசிங்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.03.2025**

**குறுக்கு விசாரணை**

**நான்** B.A **வரை படித்துள்ளேன். நான் தற்பொழுது எந்த தொழிலும் செய்யவில்லை. நான் கடந்த** 2017 **ஆம் ஆண்டு பெனிட்** & **கோ கம்பெனியில் நிர்வாக இயக்குநராக இருந்தேன். மேற்படி நிறுவனம்** TV, **பிரிட்ஜ் போன்ற வீட்டு உபயோக பொருட்களை மொத்தமாகவும், தவணையாகவும் விற்பனை செய்யும் நிறுவனம் என்றால் சரிதான். கடந்த** 2015 **ஆம் ஆண்டு புகார்தாரரை எனக்கு தெரியும். மேற்படி பெனிட்** & **கோ நிறுவனம் தற்போது வரை இயங்கி வருகிறது என்றால் சரியல்ல. மேற்படி நிறுவனம் சட்டப்படி கலைக்கப்பட்டுவிட்டதா என்றால் இல்லை. இன்று வரை மேற்படி நிறுவனம் இயங்கி வருகிறது என்றாலும் வழக்கிற்காக**

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மதுரை அரசரடியில் மேற்படி நிறுவனத்தின் கிளை உள்ளது என்றால் சரியல்ல. நான் புகார்தாரரின் வழக்கிறஞர் அறிவிப்பை பெற்றுகொண்டு, பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ம.சா.ஆ. 6 ஒப்புதல் அட்டை அரசரடியில் உள்ள மேற்படி பெனிட் & கோ நிறுவனத்தின் சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது சாட்சியத்தில் 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை புகார்தாரரிடம் வாங்கிய கடனுக்ககாக பல ஆவணங்களை செக்யூரிட்டியாக கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு அதை திருப்பி கேட்டு வழக்கறிஞர் அறிவிப்போ, காவல் துறையில் புகாரோ கொடுத்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை. Whatsapp–ல் தகவல் அனுப்பினேன். நீதிமன்றத்தில் மேற்படி Whatsapp தகவல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இதுவரை இல்லை. இனிமேல்தான் தாக்கல் செய்யவோம். புகார்தாரருக்கு செக்யூரிட்டியாக எந்த எந்த தேதியில் என்ன என்ன ஆவணங்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் அதிகமாக வட்டி கேட்டார் என்று நான் கூறியதற்கு புகார்தாரர் மீது கந்துவட்டி புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். மேற்படி புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக புகார்தாரர் கந்துவட்டி வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ. 1 காசோலை புத்தகம் என் கைவசம் உள்ள புத்தகம் என்றால் எனது அலுவலத்தில் இருந்தது. மேற்படி புத்தகத்தில் நான் நினைத்தது போல் நிரப்பிகொள்ளலாம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கிற்காக இஷ்டம்போல் நிரப்பி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ. 3 ஆவணத்தின்படி மேற்படி நிறுவனத்தில்

அங்கரிக்கப்பட்ட கையெழுத்திடும் உரிமை பெற்றவர் (Authorised Signatory) மற்றும் இயக்குநர் பெயர் பால்துரை பிரின்ஸ் மற்றும் இன்னொரு இயக்குநர் பிராபாகரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2020 ஆம் ஆண்டுதான் மேற்படி பிராபாகரன் மேற்படி கம்பெனியில் இயக்குநராக பொறுபேற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கம்பெனி 2020 ஆம் ஆண்டு இயங்கி வந்தது என்றால் சரிதான். வழக்கு காசோலை எனது சொந்த காசோலை என்றாலும், நிறுவனத்தின் காசோலை அல்ல என்றாலும் சரிதான். எ.சா.ஆ. 5 GST ரத்து ஆவணம் மேற்படி பெனிட் & கோ சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரிதான். எ.சா.ஆ. 7 கிரைய ஆவணத்தில் நான் பலதவணையில் ரொக்கம் பெற்றுகொண்டது 2,05,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணம் புகார்தாரரிடம் பணம் பெற்றுகொண்டு எழுதி கொடுத்த ஆவணம் என்றாலும், இந்த வழக்கு காசோலைக்காக எழுதி கொடுத்த ஆவணம் இல்லை என்றாலும் சரியல்ல. அதேபோல் எ.சா.ஆ. 8, 9 கிரையம் ஆவணங்களை நான் பணம் பெற்றுகொண்டு ஆவணம் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றாலும், வழக்கிற்காக இந்த வழக்கின் காசோலை கடன் அடைப்பதற்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் கடனுக்காக என்னை மிரட்டி கிரையம் பெற்றுகொண்டார் என்று சொல்வதற்கு அவர் மீது ஏதாவது புகார் கொடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். ஆனால் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. இனிமேல் தாக்கல் செய்வேன். எ.ம.சா.ஆ. 10 புகார்தாரர் என்னை மிரட்டி மலர்வண்ணன் என்பவருக்கு கிரையம் பெற்றார் என்று வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றாலும், மேற்படி நபருக்கும் புகார்தாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

(புகார்தாரரின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).